உ
சிவமயம்

# சிவபூமி

மாதாந்த செய்திப் பத்திரிகை
Monthly Journal of Sivapoomi

சிவம்–05 சுபகிருது வருடம் ஆடித் திங்கள் ஜூலை 2024 பூமி–15




## மூன்றரைக் கோடி ரூபா செலவில் ஸ்கான் இயந்திரம் சிவபூமி அறக்கட்டளை ஏற்பாட்டில் யாழ் வைத்தியசாலைக்கு கிடைக்கிறது...!



யாழ்போதனா வைத்தியசாலை,யாழ் மருத்துவபீடம் ,சிவபூமி அறக்கட்டளையுடன் இணைந்து நடாத்தும் பெண்கள் தொடர்பான கருவளச் சிகிச்சை நிலையத்துக்கு சுமார்35 மில்லியன் ருபா செலவில் இக்கருவி கொள்வனவு செய்யப்பட்டு 17.07.2024 மாலை3.00மணிக்கு கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களால் கையளிக்கப்படவுள்ளது. லண்டன் அபயம் அறக்கட்டளையிடம் ஆறு.திருமுருகன் விடுத்த வேண்டுதலால் இக்கருவி கிடைத்துள்ளது. இக்கருவிக்கான முழுச்செலவையும் திரு.சதா.மங்களேஸ்வரன் சகோதரர்கள் அபயம் ஊடாக வழங்கியுள்ளனர்.மங்களேஸ்வரன் யாழ் இந்துக்கல்லூரியில் ஆறு.திருமுருகன் அவர்களோடு கற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது

# வவுனியா பல்கலைக்கழக புதிய துணைவேந்தர் பேராசிரியர் அற்புதராஜா உரிய திட்டமிடல்களோடு அற்புதம் செய்ய வாழ்த்துக்கள்..!



எங்கள் திருநாட்டில் வவுனியாப் பல்கலைக்கழகம் உருவாகி இரண்டாவது துணைவேந்தராக பேராசிரியர் அற்புதராஜா அவர்கள் பதவியேற்றுள்ளார். இவர் சிறந்த கல்வியாளன், சிறந்த முயற்சியாளன் மற்றும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் பகுதியான கிளிநொச்சி அறிவியல் நகரில் உள்ள விவசாய பீடத்தை விருத்தி காண்பதில் அரிய பங்களிப்பாற்றிய இக்கல்வியாளன் பேராசிரியர் அற்புதராஜா என்பது மிகையாகாது. அவர்கள் இப்போது வவுனியா பல்கலைக்கழகத்தின் முதல்வராக பதவியேற்றுள்ளார்.

அவர் பணி சிறக்க வாழ்த்துவதோடு, அவருக்கு பாரிய கடமை உண்டு என்பது குறிப்பிடத்தக்கதாகும். வவுனியா பல்கலைக்கழகம் வன்னிப் பெருநிலப் பகுதியில் உள்ள சுதேச பல்கலைக்கழகமாக செயல்படுவதோடு இதுவரை எந்த ஒரு பாடத்திட்டமும் தாய்மொழியாகிய தமிழில் இடம்பெறுவது இல்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். அத்தோடு அனைத்து பாடங்களும் ஆங்கில மொழியிலேயே அங்கு கற்பிக்கப்படுகின்றது. ஆங்கில மொழியின் தகுதிப்பாட்டின் காரணமாக தமிழ் மாணவர்களின் தொகை வவுனியா பல்கலைக்கழகத்தில் மிகவும் குறைந்து கொண்டு செல்கின்றது. எனவே மன்னார், முல்லைத்தீவு, வவுனியா போன்ற வன்னி பெருநில பரப்பில் பல்கலைக்கழக அனுமதியைப் பெற்ற மாணவர்களை வவுனியா பல்கலைக்கழகத்தில் புதிய புதிய கற்கை நெறிகளை தோற்றுவித்து உள்வாங்க வேண்டியதே உண்மையான கல்விப் பணியாகும்.



மேலும் சுதேசிகளுக்காக உருவாக்கப்பட்ட யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் இருந்து பிரிந்து சென்ற வவுனியாப் பல்கலைக்கழகம் தனிப் பல்கலைக்கழகமாக உருவெடுத்துள்ள போது, சரியான ஒரு திட்டமிடலை இப்போது உருவாக்காமல் விட்டால் பல்கலைக்கழகம் பறிபோகும் நிலை உருவாகும். எனவே ஆற்றலும் அறிவும் மிக்க பேராசிரியர் துணைவேந்தராக பதவியேற்றிருக்கின்ற போது அவர் வவுனியா பல்கலைக்கழகத்தின் எதிர்கால திட்டமிடலில் எவ்வளவு தூரம் பல்கலைக்கழகத்தைச் சார்ந்துள்ள வன்னிப் பெருநில மாணவர்களை உள்வாங்கலாம் என்பதை சரியான முறையில் திட்டமிட்டு அவர்களுக்கான வாய்ப்பினை உருவாக்கி வழங்குவது தான் மிகவும் பொருத்தமானதாக காணப்படும்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகம் உருவாகிய போது பேராசிரியர் கைலாசபதி, பேராசிரியர் வித்தியானந்தர் போன்றோர்களைத் தொடர்ந்து வந்த பேராசிரியர் துரைராஜா போன்றோர் சீரிய திட்டங்களை உருவாக்கியதன் விளைவே யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திலே இசைத்துறை, நடனத்துறை, நாடகத்துறை மற்றும் சித்திரமும் வடிவமைப்பும் போன்ற புதிய துறைகள் உருவாக்கப்பட்டு ஏராளமான தமிழ் மாணவர்கள் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் கற்கும் வாய்ப்பை பெற்றுள்ளார்கள். விவசாய பூமியாகிய வடக்கில், விவசாயத் துறையினை உருவாக்க வேண்டும் என்று பாடுபட்டு விவசாய துறையினை உருவாக்கினார்கள். அதன் பின்னர் பேராசிரியர் துரைராஜாவின் பொறியியல் பாடத்திற்கென தனித் துறை உருவாக்க வேண்டும் என்ற முயற்சியினால் பொறியியல் பீடமும் உருவாக்கப்பட்டது. இதற்கிடையில் பேராசிரியர் வித்தியானந்தன் அவர்கள் மருத்துவ பீடம் அவசியம் வேண்டும் என்று நினைத்ததன் காரணமாகவே தான் தமிழ் மாணவர்கள் மருத்துவ கல்வியில் உச்ச நிலைக்கு சென்றுள்ளார்கள் எனலாம். அதேவேளை கீழைத்தேய மருத்துவமாகிய சித்த மருத்துவத்திற்கும் பல்கலைக்கழக அந்தஸ்தை கொடுத்து இன்று சித்த மருத்துவத்தில் பட்டம் பெற்று ஆயிரம் கணக்கான தமிழர்கள் வைத்தியர்களாக வெளியேறியுள்ளனர்.

வவுனியாப் பல்கலைக்கழகத்தின் எதிர்காலம் தான் என்ன? எதிர்கால திட்டமிடல் என்ன என்பதை திட்டமிட்டு அதனை பொதுமக்களுக்கு வெளிப்படுத்தி மிகச் சரியான முறையில் ஆற்றுப்படுத்தி வெற்றி காண அற்புதராஜா அற்புதம் செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

**ஆசிரியர்**
**கலாநிதி. செஞ்சொற்செல்வர். ஆறு. திருமுருகன்**

**உதவி ஆசிரியர்**
**திரு. ச.சந்தோஷன்**

**வடிவமைப்பாளர்**
**திருமதி. ச. மதுஷா**

# பக்தி பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்ட சிவத்தமிழ்ச்செல்வியின் 16ஆவது குருபூசை நிகழ்வுகள்





சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் பதினாறாவது ஆண்டு குருபூசை நிகழ்வு 19.06.2024 காலை 9.00 மணிக்கு தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்விற்கு யாழ் பல்கலைக்கழக இந்து கற்கைகள் பீட இந்து நாகரீகதுறை பேராசிரியர் முகுந்தன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றினார்.

இதேவேளை இந் நிகழ்வில் அளவெட்டி கும்பிளாவளை பிள்ளையார் ஆலய குருக்கள் சிவஸ்ரீ இராமசூரிய பிரபாகரக் குருக்கள் மற்றும் மாதகல் சாந்தநாயகி சமேத சந்திர மௌலீஸ்வரர் ஆலய குருக்கள் சிவஸ்ரீ இரத்தின ஐயர் மாணிக்கவாசகக் குருக்கள் ஆகியோருக்கு மூத்த சிவாச்சாரியார்களுக்கான விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.













# சிவபூமி வட்டுக்கோட்டை தேவார மடம் சென்னை உயர்நீதிமன்ற நீதியரசரால் திறந்து வைக்கப்பட்டது.


























எங்கள் ஈழத்தில் சைவத்திற்கும் தமிழிற்கும் பெரும் தொண்டாற்றும் வகையில் அழகிய முறையில் அமைக்கப்பட்ட வட்டுக் கோட்டை தேவார மடம் 14.08.2024 சென்னை உயர்நீதிமன்ற மாண்புமிகு நீதியரசர் ஸ்ரீ சிவஞானம் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இவ் நிகழ்வில் யாழ் பல்கலைக்கழக துணை வேந்தர், இந்து கலாசார அலுவல்கள் அமைச்சின் பணிப்பாளர், சங்கானை பிரதேச செயலாளர், நல்லை ஆதீன முதல்வர் உட்பட்ட ஏராளமான கல்வியாளர்கள், மருத்துவர்கள், துறவிகள் மற்றும் பொது மக்கள் கலந்து சிறப்பித்தனர்.

இவ் நிகழ்வில் உரையாற்றிய மாண்புமிகு நீதியரசர் ஸ்ரீ சிவஞானம் அவர்கள் எங்கள் மாநிலம் தமிழ்நாடு என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்தளவிற்கு அங்கு சைவமும் தமிழும் இல்லை என்பதை மனவேதனையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன் என தெரிவித்தார். சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற்செல்வர் அவர்களால் ஆற்றப்படும் சேவைகளை அறிந்து இப்படி ஒரு மனிதர் எங்கள் தமிழ்நாட்டிற்கு வரமாட்டாரோ என உள்ளம் ஏங்குவதாக தெரிவித்தார்.

இந்த தேவார மடத்தில் தேவார திருப்பதிகங்களை பண்ணுடன் இசைக்க கூடிய ஆற்றலை வளர்க்கும் இசை வகுப்புக்களும், அறநெறி வகுப்புக்களும், அறம் சார்ந்த விசேட நிகழ்வுகளும் நடைபெறவுள்ளதுடன் வாரத்தில் ஒரு நாள் அன்னதானம் வழங்கப்படவுள்ளது.

# பன்னிரு திருமுறைகளை நடனத்தில் நிகழ்த்திய கலைஞர்கள்



சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்ல வேண்டும் என்பது தானே திருமுறைகளின் அடிப்படை. அதனை திறம்பட உணர்ந்து ஒவ்வொரு சொற்களுக்கும் அதற்குரிய அர்த்தம் அளித்து நடன அபிநய பாவனைகளை தமது திறமையால் மேடையேற்றிய பொன்னாலை சந்திரபரத கலாலய மாணவிகள் போற்றுதலுக்குரியவர்கள். அவர்கள் திறமைக்கேற்ற மேடைகள் பல கிடைக்க மனமார்ந்த வாழ்த்துக்கள். நெறியாள்கை செய்த பொன்னாலை சந்திர பரத கலாலய நிறுவுனர் சிறிமதி சிறிதேவி கண்ணதாசன் அவர்களுக்கும் அவர்தம் குழுவினருக்கும் உளமார்ந்த நன்றிகளும் பாராட்டுகளும்.

மேலும் 14.07.2024 ஆரம்பமான வட்டுக்கோட்டை தேவார மடத்தில் இந்த தேவார திருமுறை நடன ஆற்றுகை நிகழ்ந்தமை சாலப்பொருத்தமாகும். சுமார் 120 நிமிடங்கள் தொடர்ச்சியாக 11 திருமுறைகளில் இருந்தும் தேவாரங்கள் இசைக்க அதற்கு மாணவிகள் நடனமாடி பார்ப்பவர்களின் உள்ளங்களில் இறை உணர்வை பக்தியுடன் வரவழைத்தார்கள். மாண்புமிகு நீதியரர் சிவஞானம் அவர்கள் உட்பட சபையினர் அனைவரும் மெய்மறந்து தேவார இசையுடன் சங்கமித்தனர்.





# எதை விதைக்கிறோமோ அதையே அறுவடை செய்வோம்



மகாபாரத யுத்தத்தின் போது, ஜயத்ரதன் என்பவனை,சூரிய அஸ்தமனத்துக்குள் கொன்று விடுவேன் அல்லது தீக்குளிப்பேன் என சபதம் செய்தான் அர்ஜுனன். அன்று காலையிலிருந்தே மறைவாகவே இருந்தான் ஜயத்ரதன். துரியோதனன்,கர்ணன் போன்றோர் அவனுக்கு பாதுகாவலாக இருந்தனர். அர்ஜுனனால் அவனை நெருங்கவும் முடியவில்லை.அவனிருக்கும் இடமும் தெரிய வில்லை.மாலை நேரமும் நெருங்கியது. " என்ன கிருஷ்ணா...சூரியன் அஸ்தமிக்கும் நேரமாகிறதே.!... ஜயத்ரதனை எப்படிக் கொல்வது," என்றான் அர்ஜுனன்.

சக்ராயுதத்தால் சூரியனை மறைத்தார் ,பகவான். இருள் சூழ ஆரம்பித்தது. இதைப் பார்த்த ஜயத்ரதன் குதூகலித்தான். "சூரியன் அஸ்தமித்து விட்டான்.இனி அர்ஜுனன் தீக்குளித்து விடுவான்" என்ற எண்ணத்தில் தலையை வெளியே நீட்டினான். உடன் அர்ஜுனனைப் பார்த்து, " அதோ ஜயத்ரதன் தலை தெரிகிறது. ஒரே அம்பால் அவன் தலையைக் கொய்து, தலை கீழே விழாமல் ,அருகில் சமந்த பஞ்சகத்திலுள்ள விருத்தட்சரன் என்பவருடைய மடியில் தள்ளு." எனறார் கிருஷ்ணர். ஜயத்ரதனுடைய தகப்பனார் தான் விருத்தட்சரன். தனது கோரமான தவப்பயனால்,ஜயத்ரதனைப் பெற்றார். அவன் பிறக்கும் போது ஒரு அசரீரி ஒலித்தது."உன் புத்திரன் மகாவீரனாக எல்லோராலும் கொண்டாடப் படுவான். மிக்க கோபமும்,பராக்ரமும் உள்ள வீரன் ஒருவனால், அவன் தலை அறுபட்டு மாள்வான்." என்றது. இதைக்கேட்ட விருத்தட்சரன்,தன் தவ வலிமையால் "யுத்தகளத்தில் எவன் தன் பிள்ளையின் தலையை கீழே தள்ளுகிறானோ,அவன் தலை நூறு சுக்கலாகி வெடிக்கும்" எனறு சாபமிட்டிருந்தான். இந்த விபரத்தை அர்ஜுனனுக்கு சொல்லி " உன்னால் அறுபட்டு இந்தத்தலை கீழே விழுந்தால்,உன் தலை வெடித்து விடும்.அதனால் அருகிலுள்ள அவன் தகப்பனார் விருத்தட்சரன் மடியில் அந்தத் தலையைத் தள்ளு ,"எனறார் கிருஷ்ணன். அர்ஜுனனும் அப்படியே செய்தான்.அந்த சமயம் விருத்தட்சரன் பூமியில் அமர்ந்து சந்தியோபாசனம் செய்து கொண்டிருந்ததால்,மடியில் தலை விழுந்ததை கவனிக்கவில்லை. பிறகு அர்க்யம் கொடுப்பதற்காக எழுந்த போது, அவரது மடியில் ஏதோ கனமாக இருப்பதைக் கண்டு கீழே தள்ளினார். அது பூமியில் விழுந்தது. தன் மகன் தலையைக் கீழே தள்ளுபவனின் தலை நூறு சுக்கலாகி வெடிக்கும் என்ற சாபத்தால், விருத்தட்சரனின் தலை வெடித்துச் சிதறியது.



நாம் என்னதான் சூழ்ச்சி செய்தாலும்,சாமர்த்தியமாக நடந்து கொண்டாலும், அதைத் தீர்மானம் செய்வதும், நடத்திவைப்பதும் பகவான் தான். அதனால் எல்லாப் பொறுப்புகளையும்,பகவானிடம் ஒப்புவித்துவிட்டு, "பகவானே.! உன் சித்தம்.! எது நல்லதோ,அதைச் செய் என்று சொல்லி,அவனைச் சரணடைந்தால் போதும். நம்மைக் காப்பாற்ற வேண்டியது அவன் கடமை. அவன் செய்வான்....

# மாவை கந்தனின் வருடாந்திர காம்யோற்சவம் சிறப்பாக நடைபெறுகிறது



வரலாற்று பிரசித்தி பெற்ற மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலின் வருடாந்த காம்யோற்சவம் 11.07.2024 வியாழக்கிழமை ஆரம்பமாகியது. அபிஷேக கந்தன் என்று போற்றப்படும் மாவைக் கந்தசாமியாரின் திருவிழாக் காலங்கள் விரதமிருப்பதற்குரிய புண்ணிய காலங்களாகும்.

காம்யோற்சவத்தின் சிறப்பாக இரதோற்சவம் - 03.08.2024 சனிக்கிழமையும், ஆடிஅமாவாசை தீர்த்தமான கீரிமலையில் நடைபெறும் தீர்த்தோற்சவம் - 04.08.2024 ஞாயிற்றுக்கிழமையும் நடைபெற திருவருள் கைகூடி உள்ளது.







## ஆத்ம சாந்தி பிரார்த்தனை



வடமராட்சி துன்னாலை அருள்மிகு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் பிரமகுரு பிரம்மஸ்ரீ கணபதிசாமிக்குரு சுதர்சனக்குருக்கள் கடந்த 09.07.2024 அன்று மாயவனின் பாதாரவிந்தங்களில் சரண் புகுந்தார். இவர் 1969ஆம் ஆண்டு அவருடைய தந்தையின் பின்னர் குருக்களாக பொறுப்பினை ஏற்றுக்கொண்டு 1977, 1990, 2001, 2013ம் ஆண்டுகளில் மகா கும்பாபிஷேகம் இவருடைய தலைமையில் சிறப்பாக நடைபெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

இவருடைய தமிழ் மீதான பற்றின் காரணமாக கவிதைகள், கட்டுரைகள் என்பவற்றை எழுதி பல்வேறுபட்ட இதழ்கள்,செய்தித்தாள்கள், சஞ்சிகைகளிலும் பிரசுரித்தமை குறிப்பிடத்தக்கது.

அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகிறோம்.

# சாதனைத் தமிழன் எதிர் வீரசிங்கம்






இலங்கையின் முன்னாள் மெய்வல்லுநர் ஜாம்பவான் நாகலிங்கம் எதிர்வீரசிங்கம் தனது 89 ஆவது வயதில் அமெரிக்காவில் கடந்த ஏப்ரல் 29 அன்று காலமானார்.

உயரம் பாய்தல் வீரரான நாகலிங்கம் எதிர்வீரசிங்கம் 1952 மற்றும் 1956 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் இலங்கை சார்பாக பங்கேற்ற பெருமையை பெற்றுள்ளார்.

1958 ஆம் ஆண்டு ஜப்பானில் நடைபெற்ற ஆசிய விளையாட்டு போட்டியில் உயரம் பாய்தலில் 1.95 உயரத்திற்கு ஆற்றலை வெளிப்படுத்தி புதிய சாதனையுடன் தங்கப்பதக்கம் வென்றார். இதன் மூலம் சர்வதேச மெய்வல்லுநர் அரங்கில் இலங்கைக்கு தங்கப்பதக்கம் ஈட்டிக்கொடுத்த முதல் வீரர் என்ற வரலாற்று சிறப்பும் நாகலிங்கம் எதிர்வீரசிங்கத்திற்கு உள்ளது. 1962 ஆம் ஆண்டு ஜகார்த்தாவில் நடைபெற்ற ஆசிய விளையாட்டு விழாவில் உயரம் பாய்தலில் வெள்ளிப்பதக்கம் வென்றுள்ளார்.




யாழ்ப்பாணம் பெரியவிளானில் 1933 ஓகஸ்ட் 24 ஆம் திகதி பிறந்த இவர் யாழ். மத்திய கல்லூரியின் பழைய மாணவராவார். பாடசாலை பருவத்திலேயே உயரம் பாய்தலில் அகில இலங்கை சாதனையை முறியடித்த பெருமையும் அவருக்கு உள்ளது.

இலங்கை, சியேரா லியோன், பப்புவா நியூ கினியா, நைஜீரியா ஆகிய நாடுகளில் பல்கலைக்கழக விரிவுரையாளராக பணியாற்றியுள்ள நாகலிங்கம் எதிர்வீரசிங்கம் யுனெஸ்கோவிலும் 5 ஆண்டுகள் கடமையாற்றியுள்ளார்.

# தெல்லியூரில் பூரணத்துவம் பெற்ற பன்னிரு திருமுறை முற்றோதல் நிகழ்வு

பல வருடங்களாக தொடர்ந்து நடைபெறும் தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தின் பன்னிரு திருமுறை முற்றோதல் நிகழ்வு இந்த ஆண்டும் சிறப்பாக நடைபெற்றுள்ளது. திருமுறை பாராயணம் செய்த பெருமக்களுக்கான கௌரவம் இறுதி நாளில் திருமுறை மடத்தில் நடைபெற்றது.



# பல்லவ கால சிற்ப முறைப்படி கருங்கல்லில் கட்டப்பட்ட பைரவர் ஆலயம்



அராலி வடக்கு நாகேந்திரமடம் புளியடி ஸ்ரீ ஞான பைரவர் ஆலய ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக நிகழ்வு 12.6.2024 அன்று வெகு சிறப்பாக நடைபெற்றுள்ளது.

கும்பாபிஷேக நிகழ்வில் பசு, குதிரை, யானை ஆகியன பூஜை வழிபாடுகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. அத்துடன், இந்த ஆலயமானது பல கோடி ரூபா செலவில் முழுவதும் கருங்கல்லினால் பல்லவ கால சிற்ப முறைப்படி அமைக்கப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது





# சிவபூமி அறக்கட்டளையின் வாழ்வும் பணியும் (தொடர்ச்சி 2021ம் ஆண்டுக்கு பிறகு)

1. கீரிமலை சிவபூமி முதியோர் ஆச்சிரமம்

கீரிமலை நகுலேஸ்வர ஆலயத்தின் கிருஸ்ணபிள்ளை பின் வீதியில் அமைந்த மடம் கிருஸ்ணபிள்ளையின் புத்திரர்களால் சிவபூமி அறக்கட்டளைக்கு வழங்கப்பட்டது. மேலும் பல அன்பர்களின் உதவியுடன் பாரம்பரிய நாற்சார் வீட்டு கட்டிட அமைப்பில் 12 அறைகள், உணவு பரிமாறும் பகுதி, பிள்ளையார் கோவில் என்பன அமைக்கப்பட்டு 18.11.2021 அன்று திறந்து வைக்கப்பட்டது. அத்துடன் பெரும் கொடையாளர் சண் சுந்தர் அவர்களின் உதவியுடன ஒரு பெரிய கட்டிட தொகுதி அமைக்கப்பட்டு 22.07.2023 அன்று திறந்து வைக்கப்பட்டு சிறப்பாக நடைபெற்று வருகின்றது.



2. மாவிட்டபுரம் சிவபூமி திருக்குறள் வளாகம்

மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலுக்கு அருகில் கீரிமலை சந்தியில் அமைந்த வைத்திய நிபுணர் திரு.கமலாகரன் அவர்களால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட காணியில் திருக்குறள் வளாகம் அமைப்பதற்காக 25.10.2021 அன்று அத்திவாரம் இடப்பட்டு, தற்போது துரிதகதியில் வேலைகள் சிறப்பாக நடைபெறுகின்றது. 1330 திருக்குறள்களும் கருங்கல்லில் பொறிக்கப்பட்டு வருகின்றது.




3. நாவற்குழி செம்மணிச் சந்தியில் புனரமைக்கப்பட்ட சிவலிங்கப்பெருமான் நாவற்குழி செம்மணிச் சந்தியில் மக்களின் ஆத்மாக்களின் சாந்திக்காக 07.12.2020 அன்று புனரமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தால் வழங்கப்பெற்ற 3பரப்பு காணியில் அமைக்கப்பட்டுள்ளது.

4. திருக்கேதீஸ்வர ஆலய முன்றலில் வானளாவிய சிவபெருமான் திருவுருவமும், நாவலர் பெருமானின் சிலையும் திருக்கேதீஸ்வர ஆலய முன்றலில் பாலாவி கரையில் நாவலர் பெருமானது திருவுருவச்சிலையும், எம்பெருமான் சிவபெருமானது திருவுருவச்சிலையும் அமைக்கப்பட்டு மக்கள் பார்வைக்காக 03.07.2022 அன்று திறந்து வைக்கப்பட்டது. இங்கு சிவபூமி பாலாவிமடம் அமையத் திருவருளை வேண்டுகின்றோம்.



5. கொழும்பு சிவபூமி நிலையம்

கொழும்பு கெய்க் (ர்யபை) வீதியில் அமைந்த திரு. திருமதி திரவியம் சபாரத்தினம் அவர்களினால் அன்பளிப்பாக வழங்கப்பெற்ற இருமாடிக் கட்டிடத்தொகுதி புனரமைக்கப்பட்டு கொழும்பில் சிவபூமி நிலையம்









20.10.2022 திறந்து வைக்கப்பட்டது. இங்கு அறநெறி வகுப்புகள், திருவாசக முற்றோதல் என்பன சிறப்பாக நடைபெறுகின்றது.

6. மட்டக்களப்பு கொட்டிச்சோலை சிவபூமி திருமந்திர அரண்மனை

கிழக்கு இலங்கையிலே கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வர ஆலய வளாகத்தில் அன்பளிப்பாக வழங்கப்பெற்ற காணியில் 3000 திருமந்திரப்பாடல்களும் கருங்கல்லினால் பதிக்கப்பட்டு, பொறிக்கப்பட்டுள்ளது. அத்துடன் திருமூலருக்கான விக்கிரகம் சிவலிங்கப் பெருமானுடன் 108 சிவலிங்கத்துடன் அமைக்கப்பட்டு 24.03.2023 அன்று மக்கள் பாவனைக்காக திறக்கப்பட்டுள்ளது. இதற்கு திரு. கந்தப்பிள்ளை பார்த்தீபன். திரு.யோகநாதன், திரு.திருமதி பாலசிங்கம் குடும்பத்தினர் மேலும் பல பெரியவர்களின் அன்பளிப்பினால் அமைக்கப்பட்டுள்ளது.

7. சிவபூமி மலையக ஆச்சிரமம், கலகா கண்டி

கண்டியில் கலகா எனும் இடத்தில் நிலம் கொள்வனவு செய்யப்பட்டு புனரமைக்கப்பட்டு சிவபூமி மலையக ஆச்சிரமம் அமைக்கப்பட்டு 18.01.2023 அன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. இங்கு அறநெறிப்பாடசாலையுடன் அபயம் மருந்துவமனை என்பன நிறுவப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

8. அபயம் நிதிப்பங்களிப்பில் சிவபூமி மருத்துவப் பணிகளில் சிறப்பாக தெல்லிப்பழை ஆதாரவைத்தியசாலை சத்திரசிகிச்சைப் பிரிவுக்கு நவீன Endoscopy கருவி செஞ்சொற்செல்வர் அவர்கள் வழங்கினார்.

9. திருமுறை அரங்கம் - நாவற்குழி

நாவற்குழி திருவாசக அரண்மனை திருமுறை அரங்கம் கட்டடப்பணிகள் விரைவாக நடைபெற்று வருகிறது. வெகு விரைவில் திறந்து வைக்கப் பணிகள் நடைபெறுகிறது.

10. நல்லூர் ஆறுமுகநாவலர் பெருமான் உருவச்சிலை கீரிமலை கடற்கரையில் சிவபூமி அறக்கட்டளையில் அமைக்கப் பெற்றது. சம்பூர் தமிழ்கலை மன்றம் -நாவலர் சிலை 11.12.2022 அன்று நிறுவப்பட்டது.

11. திருக்கேதீச்சரம் ஆவணம் பெட்டகம், இலக்கிய பெட்டகம் ஆகிய ஆவண நூல்களினை செஞ்சொற்செல்வர் அவர்கள் தமிழ் இலக்கிய கழகத்துடன் இணைந்து 20.08.2022 வெளியிட்டார்.

12. சிவபூமி நிலையம் கருவள சிகிச்சை நிலையம் (பெண்கள் சுகநல நிலையம் )

சிவபூமி அறக்கட்டளை, யாழ் போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம மருத்துவ பீடம் ஆகியன கூட்டாக இணைந்து 21.04.2024 அன்று திறந்து வைக்கப்பெற்றது. இந்நிலையத்திற்கான காணி செனற்றர் ளு.சு.கனகநாயகம் சத்தியம்மாள் தம்பதிகள் நினைவாக அவர்களது குடும்பத்தினரால் வழங்கப்பெற்றது.

13. சிவபூமி தேவாரத் திருமடம் தெல்லிப்பளை வீதி, வட்டுக்கோட்டை திருப்பணி வேலைகள் சிறப்பாக நடைபெற்று 14.07.2024 திறந்து வைக்கப்பட்டது.







# உடற்கூற்றியல் வினாடிவினாப் போட்டியில் யாழ் மருத்துவபீட அணி இரண்டாம் இடம்



இலங்கை உடற்கூற்றியல் சமூகத்தின் வருடாந்த அமர்வின் ஒரு பகுதியாக இலங்கை மருத்துவபீடங்களிற்கு இடையிலான உடற்கூற்றியல் வினாடிவினாப் போட்டி இரண்டாவது முறையாக இவ்வருடமும் நடைபெற்றது.

இருபகுதிகளாக நடைபெற்ற இப்போட்டியில் பத்து அணிகள் பங்குபற்றி இருந்ததுடன் முதல் பகுதி முடிவில் மூன்று சிறந்த அணிகளாக யாழ்ப்பாணம், கொழும்பு மற்றும் பேராதனைப் பல்கலைக்கழகங்களை சேர்ந்த மருத்துவ பீட அணிகள் தெரிவுசெய்யப்பட்டன. மேற்படி மூன்று அணிகளிற்கும் இடையிலான இறுதி சுற்றுப் போட்டியானது கடந்த ஆனி மாதம் 30ம் திகதி இலங்கை மருத்துவ சங்க கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதன்முடிவில் கொழும்பு மருத்துவ பீட அணி முதலாம் இடத்தையும் யாழ். மருத்துவ பீட அணி இரண்டாம் இடத்தையும் பேராதனை மருத்துவ பீட அணி மூன்றாம் இடத்தையும் முறையே பெற்றுக்கொண்டன.

யாழ் மருத்துவ பீட அணியை பிரதிநிதித்துவப்படுத்தி விநாயகமூர்த்தி திவாகரன், சிறிஸ்கந்தராஜா லக்சன், அஸ்லாம் பாத்திமா ஹம்தா மற்றும் யுதாரா ரண்லினி ரணசிங்க ஆகியோர் போட்டியிட்டனர். மேற்படி மாணவர்களுக்கான தகுந்த ஆலோசனைகளையும் பயிற்சிகளையும் சிரேஷ்ட விரிவுரையாளர்களான சிவநந்தினி உதயகுமார், துரைரட்ணம் செந்தூரன் ஆகியோரின் வழிகாட்டலின் கீழ் யாழ் மருத்துவ பீட உடற்கூற்றியல் துறை வளவாளர்கள் வழங்கினர்.

# யாழ்ப்பாணத்தில் நோயாளிகளின் உறவினர்களுக்கான சேவை மையம்










தூர இடங்களில் இருந்து யாழ் போதனா வைத்தியசாலைக்கு நோயாளர்களுடன் வரும் உறவினர்கள் மற்றும் உதவியாளர்கள் பல சிரமங்களை எதிர்கொள்ளுகின்றார்கள். இவ்வாறானவர்கள் நோயாளிகளை யாழ் போதனா வைத்தியசாலை விடுதிகளில் வைத்திருக்கும் நாட்களில் ஓய்வெடுக்க, குளித்து உடை மாற்றி கொள்ள வசதிகள் செய்யப்பட்டுள்ளது.

இல.76, வைத்தியசாலை வீதியில் (சத்திரச்சந்திக்கு அப்பால்) மேற்படி இல்லம் அமைந்துள்ளது. தனது வீட்டினை மேற்படி சேவைக்காக தந்துதவிய ளுச. இரட்ணேஸ்வரன் ருமு அவர்கள் இதற்காக வருகை தந்து மேற்படி நிகழ்வினை சிறப்பித்தார்.

தொடர்புகளுக்கு:
1.வைத்திய சாலை நலன்புரிச் சங்கம் - 0761000046.

சிவசி இல்ல இணைப்பாளர் - 0770054829

மேற்படி சேவைக்காக படுக்கை அறைகள், குளியலறைகள் உள்ளடங்கலாக வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இந்த இலவச சேவையை யாழ் போதனா வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கம் ஏற்பாடு செய்துள்ளது.

நோயாளர் நலன்புரிச் சங்க பொருளாளர் ளுச. பிறேமகிருஸ்ணா இதற்கான அனைத்து ஒருங்கிணைப்பு மற்றும் தொடர்புகளை ஏற்படுத்தி ஆரம்ப நாள் நிகழ்வை தலைமையேற்று நடாத்தியிருந்தார். வூந ளுயளைவைந வுயஅடை குழரனெயவழைெ, ருளுயு அமைப்பு இதற்கான நிதி அனுசரணையை வழங்கி செயற்படுத்துகின்றது.

நலன்புரிச் சங்க நோயாளர் பராமரிப்பு காரியாலயத்தில் விண்ணப்பப்படிவத்தை பெற்று பூர்த்தி செய்து நோயாளிகள் அனுமதிக்கப்பட்டிருக்கும் விடுதிகளுக்கு பொறுப்பான தாதிய சகோதரர்களிடம் சிபார்சு படிவத்தை கையளிக்க வேண்டும். தகுதியானவர்கள் இந்த இலவச சேவையை பெற்றுக்கொள்ளலாம். கடந்த திங்கட்கிழமை(24.06.2024) பொதுமக்களின் பயன்பாட்டுக்கு திறந்து வைக்கப்பட்டது. ஆகவே பொதுமக்கள் இந்த சேவையை சரியான முறையில் பாவித்து பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

# யாழ் வைத்தியசாலைக்கு அவுஸ்திரேலிய மருத்துவ உதவி நிறுவனம் எண்டோஸ்கோபி கருவியை (Endoscopy) அன்பளிப்பாக வழங்கியது

யாழ் போதனா வைத்தியசாலைக்கு AMAF ( Australia Medical Aid Foundation - AMAF ) நிறுவனம் 60 மில்லியன் பெறுமதியான எண்டோஸ்கோபி (Endoscopy) கருவியை அன்பளிப்பு செய்தது. மேற்படி கருவியின் மூலம் வைத்திய சாலையின் சேவைகளை மேலும் சிறப்பாக வழங்க முடியும். AMAF நிறுவனம் சார்பில் Dr. மன்மோகன் அவர்கள் இந்த கருவியை கையளித்தார். AMAF நிறுவனத்திற்கும் அதற்காக நன்கொடைகளை செய்து வரும் அனைவருக்கும் வாழ்த்துக்கள்.






# புனிதமாகப் பேண வேண்டி திருக்கோணேச்சரத்தில் அமைதிப் பேரணி



திருக்கோணேஸ்வரத்தின் புனிதத்துவத்தைப் பாதுகாக்க வேண்டியும் திருக்கோணேஸ்வர ஆலய சூழலில் அமைந்துள்ள கடைகளை அதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் அவர்களின் கடைகளை இடம்மாற்றக் கோரியும் கவனயீர்ப்பு அமைதிப்பேரணியொன்று திருக்கோணேஸ்வர நிர்வாக சபையினாலும் தொண்டர்களாலும் சைவ அன்பர்களாலும் 01.07.2024 அன்று ஏற்பாடு செய்யப்பட்டு மிகச் சிறப்பாக நடைபெற்றது. பெருமளவு மக்கள் கலந்து கொண்டு கோரிக்கைக்கு வலுச்சேர்த்தனர்.





# ஈழத்தமிழரின் கலாசாரப் பண்பாட்டு பண்டிகை ஆடிப்பிறப்பு

ஆடிப்பிறப்பு என்ற பண்டிகை தமிழ் சமூகத்தில் மிக முக்கியத்துவம் வாய்ந்த பண்டிகையாகும். குறிப்பாக ஈழத் தமிழர்கள் இந்தப் பண்டிகையை தமது கலாசார, பண்பாட்டு முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வாக கொண்டாடி வந்துள்ளார்கள். அன்றைய நாளில் ஆடிக்கூழும், கொழுக்கட்டையும்தான் சிறப்பு உணவுகள். இந்த உணவுகள்தான் ஆடிப்பிறப்பு பண்டிகை கொண்டாட்டத்தின் அடையாளங்கள். இந்த உணவுகள் ஈழத் தமிழ் மக்களின் பண்பாட்டு உணவுகள்.



சூரியன் வடதிசை நோக்கிச் செல்லும் தை தொடக்கம் ஆனி வரையுள்ள ஆறு மாத காலம் உத்தராயண காலம் எனப்படும். இது தேவர்களுக்கு ஒரு நாளின் பகல் பொழுதாகும். பின்னர், சூரியன் தெற்கு நோக்கிச் செல்லும் காலம் ஆடி முதல் மார்கழி வரையுள்ள ஆறு மாத காலம் தட்சணாயண காலம். இது தேவர்களுக்கு இராப்பொழுதாகும். தட்சணாயணத்தின் ஆரம்ப தினம் ஆடிமாத முதலாம் நாள் ஆகும். இக்காலம் கோடைகால வெப்பம் தணிந்து குளிர்மை படிப்படியாகப் பெருகும் இயல்புடையது. வானியல், அறிவியல் பின்புலத்தை கொண்ட இந்தப் பண்டிகை இயற்கைசார்ந்த வழிபாடாகவும் பரிமாணம் பெறுகிறது.



ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்த மானந்தம் தோழர்களே!
கூடிப்பனங்கட்டி கூழுங் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே!

பாசிப்பயறு வறுத்துக்குத்திச் செந்நெல்
பச்சை அரிசி இடித்துத் தெள்ளி,
வாசப்பருப்பை அவித்துக்கொண்டு நல்ல
மாவைப் பதமாய் வறுத்தெடுத்து,

வேண்டிய தேங்காய் உடைத்துத் துருவியே
வேலூரில் சக்கரையுங்கலந்து,
தோண்டியில் நீர்விட்டு மாவை அதிற்கொட்டி
சுற்றிக் குழைத்துத் திரட்டிக்கொண்டு.

வில்லை வில்லையாக மாவைக் கிள்ளித்தட்டி
வெல்லக் கலவையை உள்ளே இட்டு
பல்லுக் கொழுக்கட்டை அம்மா அவிப்பளே
பார்க்கப் பார்க்கப் பசி தீர்ந்திடுமே!

பூவைத் துருவிப் பிழிந்து பனங்கட்டி
போட்டு மாவுண்டை பயறுமிட்டு
மாவைக் கரைத்தம்மா வார்த்துத் துழாவுவள்
மணக்க மணக வாயூறிடுமே

குங்குமப் பொட்டிட்டு பூமாஇலை சூடியே
குத்து விளக்குக் கொளுத்தி வைத்து
அங்கிளநீர் பழம் பாக்குடன் வெற்றிலை
ஆடிப் பாடிப்பும் படைப்போமே

வண்ணப் பலாவிலை ஒடிப்பொறுக்கியே
வந்து மடித்ததைக் கோலிக்கொண்டு
அன்னை அகப்பையால் அள்ளி அள்ளி வார்க்க
ஆடிப் புதுக்கூழ் குடிப்போமே

வாழைப் பழத்தை உரித்துத் தின்போம் நல்ல
மாவின் மாவின் பழத்தை அறுத்துத் தின்போம்
கூழைச் சுடச் சுட ஊதிக்குடித்துக்
கொழுக்கட்டை தன்னைக் கடிப்போமே

ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்த மானந்தந் தோழர்களே

நாவலியூர் சோமசுந்தரப் புலவர்

# யாழ் போதனா வைத்தியசாலையில் என்பு மச்சை மாற்று சத்திர சிகிச்சை நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (Bone Marrow Transplant Unit)

இரத்த புற்றுநோய் மற்றும் அதனோடு இணைந்த நோய்களுக்கான சிகிச்சைகளுக்கு வழங்க கூடிய என்புமச்சை மாற்று சத்திர சிகிச்சை நிலையம் யாழ் போதனா வைத்தியசாலையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் இவ்வாறான சிகிச்சை நிலையம் மகரகம வைத்தியசாலை மற்றும் கொழும்பு சிறுவர் வைத்தியசாலை ஆகிய இரண்டில் மாத்திரம் காணப்படுகின்றது. இது இலங்கையின் மூன்றாவது நிலையமாக பதிவு பெறுகின்றது. இவ்வாறான சிகிச்சையை தனியார் வைத்தியசாலை அல்லது இந்தியாவில் போன்ற வெளிநாடுகளில் பெறுவதாயின் பல மில்லியன் செலவீனம் ஏற்படும். இந்த சிகிச்சை மிகவும் சிக்கலான ஒரு விடயங்களை கொண்டுள்ளது. இரண்டு விஷேட படுக்கை அறைகளை கொண்டுள்ளது. ஆகவே மாதம் ஒன்றில் இருவருக்கு மாத்திரம் சிகிச்சை செய்யமுடியும். சுகாதார அமைச்சின் வழிகாட்டுதலின் அடிப்படையில் வைத்திய நிபுணர்களின் கடுமையான முயற்சியில் பல சிரமங்களுக்கு மத்தியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நல்ல முயற்சி. தடைப்படாது தொடர்ந்து நடைபெற வேண்டும்.





# ஒட்டுசுட்டான் தான்தோன்றீச்சர மகோற்சவம் ஆரம்பம்



ஈழத்தின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலய வருடாந்த மஹோற்சவம் 06.07.2025 கொடியேற்றத்துடன் பக்தி பூர்வமாக ஆரம்பமாகியது. பக்தி பூர்வமாக நடைபெறும் திருவிழாக்களில் பெருமளவு மக்கள் கலந்து கொள்கிறார்கள்.





# கோலூன்றிப் பாய்தலில் தேசிய சாதனை நிலைநாட்டிய தமிழ் வீராங்கனை









சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பழைய மாணவி நேசராசா டக்சிதா, கோலூன்றிப் பாய்தலில் 3.72அ பாய்ந்து தேசிய சாதனையை நிலை நாட்டியிருக்கிறார்.

ஐந்து வருடங்களுக்கு முன்னர் இவர் கனிஸ்ட பிரிவினருக்கான தேசிய மட்ட கோலூன்றி பாய்தலில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்து தங்கப் பதக்கத்தை சுவீகரித்துள்ளார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

2022இல் சச்சினி பேரேராவினால் நிலைநாடலடப்பட்ட 3.71 அ என்கின்ற சாதனையினை இன்றைய தினம் 3.72 அ பாய்ந்து முறியடித்திருக்கின்றார் சாவகச்சேரி மத்திய கல்லூரியின் பழைய மாணவி நேசராசா டக்சிதா. முன்னதாக இந்த சாதனையினை யாழ்ப்பாணத்தினை சேர்ந்த அனித்தா ஜெகதாஸ்வரன் தக்கவைத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

டக்சிதா அவர்களுக்கு பெருமளவு பாராட்டுக்கள் குவிந்து வருகின்றன. மேலும் பல சாதனைகள் நிலைநாட்ட அன்பான வாழ்த்துக்கள்.









# இதய அஞ்சலி

கொக்குவில் இந்துக் கல்லூரி மற்றும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரிகளின் முன்னாள் அதிபர்,சிறந்த சமயப்பற்றாளர் ,சமூகப்பணியாளர் என பன்முகம் கொண்ட ஈழத்தின் ஆளுமை திரு.பொ.கமலநாதன் சேர் அவர்கள் 26.06.2024 அன்று உயிரிழந்தார்.



சுகவீனமுற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவரான இவர் கொக்குவில் இந்துக் கல்லூரியில் அதிபராகவும் (1996 - 2007), யூனியன் கல்லூரியில் பலவருடங்கள் ஆசிரியராகவும் பின்னர் 1994 முதல் 1996 வரை அதிபராகவும் சேவை புரிந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அன்னாரின் ஆத்மா இறை பாதம் சேர இறைவனை வேண்டுகிறோம்.

# யாழ் தாதியர் பயிற்சிக் கல்லூரியின் புதிய அதிபர் பதவியேற்பு

யாழ் போதனா வைத்தியசாலையின் யாழ் தாதியர் பயிற்சிக் கல்லூரியின் அதிபராக திரு. ஜெயக்குமார் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டார். 29 வருடங்களாக தாதியர் சேவை மற்றும் தாதியர் பயிற்சிக் கல்லூரியில் பல்வேறு படிநிலைகளில் கடமை புரிந்த திரு. ஜெயக்குமார் சிறந்த முறையில் தாதியர் பயிற்சிக் கல்லூரியினை முன்னெடுத்துச் செல்ல வாழ்த்துக்கள்.







# மக்கள் திரண்ட நயினைத் தாயின் இரதோற்சவப் பெருவிழா

ஈழத்தின் பிரசித்திபெற்ற ஆலயமான நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவம் மிகச்சிறப்பாக நடைபெற்றது. அந்த வகையில் தேர்த்திருவிழா 20.06.2024 அன்று பெருமளவு பக்தர்கள் புடைசூழ சிறப்பாக நடைபெற்றது. அம்பாள் திருத்தேரில் ஆரோகணித்து வரும் அழகைக் காண இலங்கையின் பலபாகங்களில் இருந்தும் மக்கள் வருகை தந்து அம்பாளின் பேரருளை பெற்றனர்.







# கதிர்காமக் கந்தனின் பெருந்திருவிழா ஆரம்பம்

வரலாற்றுச் சிறப்புமிக்கதும் திருப்புகழ் பாடப்பெற்றதுமான கதிர்காம கந்தனின் 2024ஆம் ஆண்டுக்கான வருடாந்த மகோற்சவ பெருவிழா 06.07.2024 ஆரம்பமாகியது. தினமும் பல்வேறு கலாச்சாரங்களை பிரதிபலிக்கும் கலை நிகழ்வுகளுடனான ஊர்வலம் நடைபெற்று வருவதுடன், 21ஆம் திகதி இறுதிப் பெருவிழா நடைபெறவுள்ளது. பின், 22ம் திகதி காலை, மாணிக்க கங்கையில் தீர்த்தோற்சவத்தையடுத்து , உற்சவம் இனிதே நிறைவடையும்.














# சிறப்புற நிகழ்ந்த இணுவைக் கந்தப்பெருமானின் மகோற்சவம்

உலகப்பெருமஞ்சம் எனும் சிறப்புப் பெற்ற மஞ்சத்தை உடைய இணுவில் கந்தசுவாமி ஆலயத்தின் 2024 ஆம் ஆண்டுக்கான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மகோற்சவம் 11.06.2024 ஆம் திகதி ஆரம்பமாகி மிகச்சிறப்பாக நடைபெற்றது. உலகெல்லாம் பரந்திருக்கும் இணுவையம்பதி கந்தப் பெருமானின் பக்தர்கள் முருகப்பெருமானை வழிபட்டு ஆசி பெற்றார்கள்.









இந்தப் பத்திரிகை சிவபூமி அறக்கட்டளையால் வெளியிடப்பட்டுள்ளது.(ஆடி 2024) ISBN-978-955-7420-00-4